# DEPOSITION OF WITNESS

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : STC No.679/2022**

**Prosecution witness : ம.சா. 1** **Date : 24.01.2024**

| | |
|---|---|
| **Name : முகேஸ்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி –**

1. எதிரியின் கணவர் பெயர் தெரியுமா என்றால் தற்போது நினைவில்லை. எதிரியின் கணவர் என்ன தொழில் செய்கிறார் என்றால் அரசாங்க ஊழியர் செய்வதாக கூறினார். எனது அறிவிப்பிலும் முதல் விசாரணையிலும் பணம் வாங்கியதாக பொய்யாக சொல்லியுள்ள சங்கதி குறித்து அந்த தேதியில் பணம் வாங்கிய போது கணவர் அப்போது இருந்தாரா என்றால் இல்லை. இரண்டு காசோலை யுள்ள நிலையில் அடுத்தடுத்து காசோலை எண் கொண்டதினை கொடுத்தார என்றால் அவ்வாறு கொடுக்கவில்லை.

2. காசோலை எண்கள் சொல்லமுடியுமா என்றால் 00015 மற்றும் 00006 ஆகும். எந்த காசோலை எவ்வளவு தொகைக்கு என்று சொல்லமுடியுமா என்றால் 00015 ல் ரூ.2 லட்சமும் மற்றும் 00006 ரூ.7 லட்சமும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. எதிரி புஷ்பா எந்த முகவரி கதவு எண், விலாசம் தெரியுமா என்றால் கதவு எண் மற்றும் விலாசம் நினைவில்லை. சாட்சி ஓசூரில் எதிரி இருந்ததா சொன்னார். எந்த வீதி, கிராமம் என்று தெரியுமா என்றால் தற்போது நினைவில்லை.

3) எதிரிக்கும் நான் யார் என்றே தெரியாது என்றும், அவர் என்னிடம் காசோலை கையொப்பம் செய்து கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. பணம் எங்கே வைத்து வாங்கப்பட்டது என்றால் ஓசூரில் பஸ் நிலையத்தில் வைத்து வாங்கப்பட்டது. எந்த தேதியில் பணம் கேட்டனர் என்றால் அக்டோபர் மாதம் இறுதியாக கேட்டார்கள். தேதி தெரியாது.

4) எதிரி கையொப்பம் காசோலை செய்யவில்லை என்றால் சரியல்ல. இதனை

Expert opinion க்கு அனுப்ப எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான். பூர்வீகம் எனக்கு மேச்சேரி என்றால் சரிதான். பெங்களூரில் வேலை செய்கிறேன் என்றால் இல்லை கோயம்புத்தூரில் வேலை செய்கிறேன். எதிரிக்கு நான் ஓசூருக்கு சென்று பேருந்து நிலையம் அருகில் வைத்து கொடுத்த நிலையில் எதிரி கடனை திருப்பி செலுத்தும் தகுதி உடையவரா என்பதை அறிந்து கொண்டேனா என்றால் ஆமாம். எதிரி டிசைனிங் Boutique வைத்து நடத்தி வருகிறார்.

5) எதிரி டிசைனிங் Boutique எங்கு வைத்து நடத்தி வருகிறார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. ஆனால் எதிரி சொன்னார். ஓசூரில் எங்கு வந்து கேட்டார் என்றால் தொலைபேசி மூலமாக கேட்டார். நான் ஓசூர் சென்று கொடுத்தேன். எந்த தேதியில் பேனில் அழைத்தார் என்றால் தேதி நினைவில்லை. ஆனால் அக்டோபர் மாதத்தில் கேட்டார்.

6) நான் பணம் எவ்வாறு ஏற்பாடு செய்தேன் என்றால் எனது வீட்டில் வைத்திருந்தேன். எனக்கு போன் வரும் போது நான் எங்கே இருந்தேன் என்றால் கோயம்புத்தூரில் இருந்தேன். எத்தனை நாட்கள் கழித்து பணம் கொடுக்க சென்றறேன் என்றால் 2 வாரம் கழித்து சென்றேன். சாட்சி மீண்டும் 15.11.2021 ம் தேதி கொடுத்தாக சொன்னார். எதிரியை யார் என்றே தெரியாது என்றால் சரியல்ல. எந்த வகையில் எனக்கும், எதிரிக்கும் பழக்கம் என்றால் வினோத் சேகர் என்ற நண்பர் மூலம் பழக்கம். வினோத் கேசரும், எதிரியும் நண்பர் என்ற முறையில் பழக்கம். நான் கல்லூரில் படிக்கும் போது அசோக் லைலாண்ட் கம்பெனிக்கு Training செல்லும் போது வினோத் கேசர் பழக்கம்.

7) எதிரி புஷ்பா என்பவர் எவ்வாறு தெரியும் என்றால் அடிக்கடி ஓசூர் போகும் போது எதிரி வீட்டிற்கு சென்று பழக்கம். எதிரி வீடு தெரியும். ஆனால் தெரு, மற்றும் விலாசம் தெரியாது. எதிரியை நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. 2018–ம் லிருந்து வினோத் சேகர் மூலமாக பழக்கம். ஆனால் நேரடியாக தெரியாது. இது சம்மந்தமாக நாங்கள் பணம் கேட்ட விவரத்தையும், பணம் கொடுத்த விவரத்தையும் வினோத் சேகரிடம் சொன்னேனா என்றால் இல்லை. ஏனென்றால் புஷ்பாவுக்கும், வினோத் சேகருக்கும் அந்த சமயத்தில் பிரச்சனை

இருந்ததால் நான் சொல்லவில்லை.

8) வழக்கறிஞர் அறிவிப்பில் பல ஆண்டுகள் என்று குறிப்பிட்டுள்ள நிலையில் எத்தனை ஆண்டுகள் என்று சொல்லமுடியுமா என்றால் 2018 முதல் தெரியும். என்ன காரணத்திற்காக 2018 முதல் தெரியும் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் குறிப்பிட்டு காரணம் இல்லை. எனது அறிவிப்பில் பல்வேறு ஆண்டுகளாக பழக்கம் என்று பொய்யாக உள்ளது என்றால் சரியல்ல. குறிப்பிட்டு ஓர் இரு ஆண்டுகள் உள்ள நிலையில் பல ஆண்டுகள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது தவறு என்றால் அப்படி கூட எடுத்துக்கொள்ளலாம்.

9) எதிரியின் முதல் கணவர் எங்கே உள்ளார் என்றால் பெங்களூரில் உள்ளதாக சொல்லியுள்ளார். இரண்டாவது கணவர் எங்கே உள்ளார் என்றால் ஓசூரில் உள்ளார். வினோத் சேகர் என்பவர் தான் எதிரியின் 2 வது கணவர் ஆவார். வினோத் சேகர் என்பவர் எதிரியின் 2 வது கணவர் கிடையாது என்றால் எனக்கு தெரிந்து அவர்கள் இருவரும் Living together ஆக வாழ்ந்து வருகிறார்கள். எத்தனை ஆண்டுகளாக Living together ஆக வாழ்ந்து வருகிறார்கள் என்றால் 2019 முதல் வாழ்ந்து வருகிறார்கள்.

10) எங்கிருந்து பணம் சேகரித்து வீட்டில் வைத்திருந்தேன் என்றால் எனது தாயாரிடம் ஏற்கனவே கொடுத்து வைத்திருந்ததை எதிரி கேட்கும் போது கடனாக கொடுத்தேன். அம்மாவிடம் கொடுக்க பணம் எப்படி கிடைத்தது என்றால் எனது அப்பா jail warden ஆக வேலை செய்தார். அப்பா இறந்தபின்னிட்டு, வாரிசு அடிப்படையில் வந்த பணத்தை நான் எனது அம்மா விடம் கொடுத்து வைத்திருந்தேன். அது போக, 2017–ம் ஆண்டிலிருந்து நான் வேலை செய்த பணத்தை எனது அம்மாவிடம் கொடுத்து அதன் வாயிலாக சேமிப்பிலிருந்து கொஞ்சம் எடுத்து எதிரியிடம கொடுத்தேன்.

11) ஒருவர் காசோலை கொடுக்கும் போது அடுத்த அடுத்த காசோலை தான் கொடுப்பார்கள் என்ற நிலையில் 11 எண் தாண்டி காசோலை கொடுத்தால், எதிரியிடமிருந்து காசோலை வரவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த 2 காசோலைகளில் கையொப்பம் மாறியுள்ளது என்றால் சரியல்ல. 2 காசோலைகளும், எதிரி வழங்கவில்லை என்றும், அதில் உள்ளது எதிரியின்

கையொப்பம் இல்லை என்றும், எதிரிக்கு நான் கடன் வழங்கவில்லை என்றும், எதிரியின் கணவரின் நண்பர் மூலமாக கிடைத்த காசோலைகளை வைத்து நான் துர்லாபம் அடைய வேண்டி பொய்யாக எதிரி மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றும், அதனால் இந்த வழக்கு அதிக செலவு தொகையுடன் தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

12) வழக்கறிஞர் அறிப்விப்பு 04.02.2022 ம் தேதி அனுப்பினேன். அதை எதிரி பெற்றுக்கொள்ளவில்லை. என்ன காரணத்திற்காக வாங்கவில்லை என்றால் refused என்று திருப்பப்பட்டுள்ளது. எந்த விலாசத்திற்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பட்டது என்றால் டிராங்குள் லே அவுட், ஓசூருக்கு அனுப்பட்டது. முழுவிலாசம் தெரியுமா என்றால் தற்போது நினைவில்லை. நான் அறிவிப்பு அனுப்பிய விலாசத்தில் எதிரி இல்லை என்றும், நானாகவே விலாசத்தை ஜோடித்துக்கொண்டு, அறிவிப்பு திருப்படும்மாறு செய்துள்ளீர் என்றால் சரியல்ல. எனக்கும் எதிரிக்கும் வரவு செலவு இல்லை என்றும், அதனால் இந்த வழக்கு அதிக செலவு தொகையுடன் தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

13) எதிரிக்கும் அவரது கணவருக்கும் உள்ள கருத்து வேறுபாட்டு காரணத்தை பயன்படுத்தி வினோத் குமார் என்பவரிடம் காசோலையை வாங்கி நானாகவே எதிரியின் கையொப்பத்தையும், மற்ற விவரங்களையும் பூர்த்தி செய்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வினோத் குமார் அவர்களுக்கு எதிரியின் கணவர் மூலமாக காசோலை வந்தது என்றால் இல்லை. எதிரியின் 1வது கணவர் பெயர் என்ன என்றால் எனக்கு தெரியாது. எதிரியின் கணவர் பெயரை அறிவிப்பில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எதிரியின் கணவர் பெயரை ஏன் சொல்லவில்லை என்றால் எதிரியின் கணவர் தான் காசோலை கொடுத்த நிலையில் நான் வேண்டுமென்றே நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரியின் கணவரின் தூண்டுதலின் பேரில் தான் நான் வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. மறுவிசாரணை இல்லை.

**ஓம்/– தே.மயில்சாமி,**
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மேட்டூர்.**